# அருட்பாவில்

# வர்ணத்திரைகளும் மணிகளும்

## ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை

யோக நூல்களை ஒப்பிட்டு

விளக்கியது.

# சிறப்புச் செய்தி

ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை செய்த தவத்தால், சத்திய ஜோதி என்றும் திவ்ய விஞ்ஞான ஜோதி என்றும் (*Truth Light or Supramental Light*) அவர்கள் சொல்லுகின்ற தெய்வீக ஒளியை 1956 பிப்ரவரி 29 ம் தேதி முதலாக இவ்வுலகுக்கு ஒளி வெள்ளமாக தொடர்ந்து பாயும்படி ஸ்ரீ அன்னை கொண்டு வந்துள்ளார். மேலும் அண்மையில் ஞானப்பிரகாச வள்ளலார் கூறும் அருட்ஜோதி, விஞ்ஞான ஜோதியின் ஒரு செயற்பாடு (*one Acti-eity of the Supramental Light*) என்றும் வள்ளலார் இச்சோதியை அருட்சோதி என்று சிறப்பாக பெயரிட்டிருப்பது தான் மிகவும் விரும்புவதாகவும் ஸ்ரீ அன்னை தெரிவித்துள்ளார். பெருமான் இராமலிங்க வள்ளலார் இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்பு அருட்பெருஞ்சோதி உலகுக்கு வரும் என்றும் அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் அரசு உலகில் ஏற்படுமென்றும் அதை விரைந்து வரவேற்க மெண்டுமென்றும் ("அருட்பெருஞ் ஜோதி துரிய நடநாதன் அமர்ந்து இங்கிருக்க வையமிசைத் திருக்கோயில் அலங்கரிமின் விரைந்தே") அருளியதால் அவருடைய வாக்கு இன்று நிறை வேற்றப்பட்டு வருகிறது என அருளால் அறிய வேண்டும்.

---

கட்டுரை எழுதியவர்
T. R. துளசிராம்

வெளியிட்ட அன்பர்
**சக்தி ஸ்டோர்ஸ்**
பாண்டிச்சேரி.

# அருட்பாவில் வரும் வர்ணத் திரைகளும், மணிகளும்.

T. R. துளசிராம்

திரைகள் படிப்படியாக நீக்கி அல்லது ஊடுருவி உள்ளே இருக்கும் ஆண்டவனை, மெய்ப்பதியை (seat or home of truth) ஆன்மாவை தரிசிக்கும் கோவில் மனிதனிடம் உள்ளது. "ஆன்மா சிற்றணு வடிவன்" (soul - atom, soul, divine spark in man, psychic entity). உள்ளத்தின் வெகு ஆழத்தில் அல்லது புருவ மத்தியின் உள்ளே ஒருவன் உள் நோக்கிச் சென்றால் அதன் ஆழத்தில் தன் சொந்த உண்மையான இருப்பு நிலையை (one's own true being or existence) ஆன்மாவை தரிசிக்கலாம்; அறிந்துஅதில் நிலைபெறலாம். 'ஜோதி அகவல்' படியும் "உபதேசத்தில்" வரும் ஏழு திரை விளக்கப்படியும் ஒருவன் உணர்வினால் உள்முகமாகச் சென்றாலும் (horizontal inword - going consciousness) மேல் நோக்கி ஏறிச் சென்றாலும் (vertical ascension) ஒவ்வொரு கட்டத்திலும் அஞ்ஞானத் திரைகள் உண்டு. அவற்றைக் கடக்கவேண்டும். அல்லது ஊடுருவிப் பின்பு நீக்கவும் வேண்டும். உள் நிலைகளுக்கு ஒத்தபடி அவற்றுடன் மேல்நிலை வெளிகளும் உலகுகளும் ரகசியமாகத் தொடர்புகொண்டு

அமைந்துள்ளன. ஆகவே நம் உணர்வு உள்முக மாகப் புகுவதும் மேல் வெளிகளுக்கு ஏறுவதும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவை. மிகவும் ஆழத்தில் ஆன்மா (soul) அல்லது ஜீவான்மாவுக் கும் (வள்ளலார் சொற்பதம்) உயர்வற உயர்ந்த சத்திய ஞானப் பெருவெளி (super - mind) க்கும் சம்பந்தம் உண்டு. ஜோதி அகவலில் மெய்ப்பதி (seat or Home of Truth) ஆன்மாவையும் அதே சமயம் ஞானப்பெரு வெளியையும் குறிக்கும். இரண்டையும் அறிந்து அடைவதே சித்தியாகும்.

இத்திரைகளாகிய வர்ணங்கள் அடையாள பூர்வமான குழூஉக் குறிகளாக (symbolic vision) நம் அகக் காட்சியில் தோன்றும். இவை அடிப்படையான உண்மைத் தத்துவங்களையும் ஆனல் அஞ்ஞானத்தால் மறைபட்டு மாறுதலுற்றுத் திருகிய அஞ்ஞான தத்துவங்களையும் குறிக்கும் ஜோதி அகவலில் வரும் திரை விளக்கங்களிலிருந்து பொதுவாக நாம் அறிய வருவது இதுதான். மேல் ஏறும் வரிசைக் கிரமத்தில் (order of vertical ascension) ஒரு திரையின் தத்துவம் அதற்கு மேலுள்ள அல்லது மேம்பட்ட இன்னொரு தத்துவத்தையும் மற்றும் அது சம்பந்தப்பட்ட வெளிகளையும் உலகு களையும் மறைக்கும். இதைப் பின்னல் அட்டவணை யின் மூலம் விளக்குவோம். இதுபோல் நம் உணர்வு உள்முகமாகப் புகும் கிரமத்தில் (levels of inward-going movement) ஒரு திரையின் தத்துவம் அதற்

கும் உள்ளே இருக்கும் இன்னொரு தத்துவத்தை மறைக்கும். உதாரணமாக உடல் (சிவப்புத்திரை) பிராணனையும் (vital or life), பிராணன் (பச்சைத் திரை — "ராகாதிகளாகிய பச்சைத்திரை") மனதை யும், மனது (நீலத்திரை) ஆருயிரையும் (ஆன்மாவின் பிரதிநிதி evolving soul or psychic being சாமாந் நிய ஜீவன்) மறைக்கும்.

ஏகமும் அனந்தமுமாகிய சத் – சித் – ஆனந்தம் (பொருள் – சித்து – இன்பம் Being - Consciousness-Force – Bliss) பேராண்டவனாகும். அதுவே ஜகமய மாய் எல்லாமாய் (Universal All – existence or Super mind) அனந்தமும் — அந்தமுமாய், அகண்ட மும் – கண்டமுமாய் (Infinite – finite) ஆகியிருக் கிறது. இது மெய்ப்பதி. பேராண்டவனின் அம்சமே ஆன்மா. இந்த ஆன்மா தலையினுச்சியில் சகஸ்ரா ரத்தில் (நாதம்) 'பரமாத்மா'வாகவும் அதாவது பரமாத்மாவின் 'இயற்கை உண்மை ஏகதேச மாகவும்' (individual self or portion of the Supreme Self, Sat), உள்ளத்தின் அல்லது புருவ மத்தியின் (விந்து) ஆழத்தில் ஜிவாத்மாவாகவும் (soul, soul-atom, ஆன்ம அணு or psychic entity), ஜீவாத்மாவின் பிரதிநிதியாக இருந்து "விசேஷ ஜீவன்"களாகிய (instrumental beings of nature) மனோ ஜீவன், பிராண ஜீவன், அன்னமய ஜீவன் ஆகியவற்றை மறைவாகப் பின்னால் நின்று அஞ் ஞானத்தில் வழிகாட்டி நடத்தி வளர்த்து தானும்

தனித்த ஆன்ம உருவாக (as individual soul) வளர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும். ஆருயிராகவும் (உயிர், மன்னுயிர், சாமாந்நிய ஜீவன், விந்து சத்தன் evolving psychic being) விளங்கும். இப்பதங்களைப்பற்றி பின்னொரு கட்டுரையில் விரிவுபட விளக்குவோம்.

இனி உள் முகமாகச் சென்று திரைகளைப்பற்றி ஆராய்வோம். ஆண்டவனின் சாந்நித்தியமும் (Divine presence) ஆன்மாவின் இருப்பும் உணர்வும் (existence and consciousness of soul) முழு ஜட இருளிலும் கூட (the black Inconscient Darkness) நிலைபெற்று நிலைத்தும் ஆனால் அதே சமயம் மறைபட்டும் உள்ளன; அதாவது அவற்றின் தெய்வீக அரசாட்சியை இடுவெளி (நெருக்கமான மரண வெளி) என்றும் கருவெளி என்றும் (ஜோதி அகவல்வரி 751-752) 'இருட்பெரும் கார் அள்ளற் கடல்' (the nether ocean of black Inconscient Darkness — சித்தி வளாகப் பகுதி ப. 103, 184) என்றும் சொல்லப்படுகின்ற ஜட அசேதன இருள் மறைத்து விடுகிறது. (1) இதுவே கரைக்கமுடியாத "கரைவின்மா மாயை" யின் கருப்புத் திரையாகும். முதல் திரை. இருளைக் கவ்வும் இருட் திரட்சியாகவும் "உளி நின்ற இருள்" — துளைக்கவும் ஊடுருவவும் முடியாத வைரம்போன்ற கெட்டியான இருளாகவும், எல்லாவற்றையும்—உடல் பிராணன் மனம்—ஆகியவற்றை மாய்க்கும் மரண வெளியாகவும் உள்ளது. இதிலிருந்தே நம் ஜட

மண்ணுலகு தோன்றியுள்ளது. ஸ்ரீ அரவிந்தர் சாவித்திரி என்னும் காவியத்தில் சாவித்திரியின் தந்தையும் அரசரும் யோகியுமான அஸ்வபதி அவ் விருளில் இறங்கி சகிக்க முடியாத மரண வேதனை அனுபவங்களைப் பெற்று ஆன்மாவின் அரசு இழந்த தாக வர்ணிக்கிருர். அவற்றை யோக பலத்தால் சகித்த பின் ஆன்ம அரசு திரும்பவும் பெறுகிருர்.

"He was alone with the grey Python Night
A dense and nameless Nothing conscious mute ...
A formless Void suppressed his struggling brain
A darknes grim & cold oppressing his flesh...
Hope strangled and perished in his empty soul
Belief and memory abolished died...
An incapacity for faith and hope
And dread conviction of a vanquished soul
Immortal still but with its godhead lost,
Self lost and God and touch of happier worlds...
But he endured, stilled the vain terror, bore
The smothering coils of agony and affreight
Then peace returned and the soul's sovereign gaze".

(Sairtam page .46-248)

இதற்குப்பின் ஆன்மாவையும் அதன் பிரதி நிதியான ஆருயிரையும் அசுத்த மாயா அல்லது "தோற்ற மா மாயையின்" அரை குறை உணர் வுள்ள அஞ்ஞான தத்துவங்களாகிய 2) நீல வர்ணமான மனத்திரையும் 3) பச்சை அல்லது கருமையிற் பச்சை வர்ணமான பிராணமயத் திரை யும் (ராகாதிகளாகிய பச்சைத்திரை—veil of the

desires of life, the vital) 4] சிவப்பு வர்ணமான உடல் அல்லது பௌதிக தத்துவத்திரையும் (the veil of the physieal) மறைக்கின்றன. ஸ்ரீ அரவிந்தர் இதைச் சுருக்கமாக விளக்குகிறார்.

"Soul cannot lose all consciousness, for its very nature is consciousness, though not of the mental kind to which we give the name. The consciousness (ie. consciousness of the soul] is merely covered, not lost or abolished by the so called 1) Inconcient of material Nature and then by the half - consious ignorance of 2) mind 3) life and 4) body." (on yoga Tome I p. 447)

மேலும் ஸ்ரீ அரவிந்தரின் யோக நூலில் (on yoga Tome II p. 73–85 Visions & Symbols - vision of light & colour) நீலம் பச்சை சிகப்பு முறையே மனது பிராணன் பௌதிகம் ஆகிய சக்திகளைக் குறிக்கும் எனப் பல இடங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வள்ளலார் 'ராகாதிகளாகிய பச்சைத் திரை' என்பதால் பிராணமய ஆசைகளையும் குறிப்பாக பிராணனையும், "என் வடிவம் தழைப்ப" (for transformation of the physical body) ஆண்டவர் ஒரு பொன் வடிவம் தரித்து தனக்கு 'மண் விருப்பம் கொளும்' ஒளிமயமான செஞ்சுடர்ப்பூ கொடுத்ததால் பொதுவாக சிவப்பு நிறத்தால் பௌதிக தத்துவமான உடலையும் குறிப்பிடுவதாகத் தெரிகிறது.

"The deep red light is a light that comes down into the physical for its change. It is associated with the sun light and the golden light (ie. of the supermind)". "Red flowers would ordinarily indicate an opening of the consciousness either in the physical or some part of the vital according to the shade."

(yoga Tome II p. 81, 88.)

இனி ஐந்தாவதாகிய பொன்மைத் திரையும் ஆருவதாகிய வெள்ளைத் திரையும் சுத்த மாயையில் வருபவை. மறைத்தாலும் இலேசாக ஊடுருவிப் புகுந்து தொடர்பு கொள்ள முடியும். ஆகவே ஆன்மாவையும் ஆருயிராகிய சாமான்னிய ஜீவனையும் சற்று தூய்மையுடனும் அறிவு உணர்வுடனும் கூடிய அகநிலையில்—அதாவது உள்மனம், உள் பிராணன், உள் உடல் ஆகிய உள் நிலைகள் கொண்டது—பொன்மைத்திரை மறைக்கும். இதனால் உள் மனம் பொன்மை கலந்த நீலமாகவும் அல்லது பொன்னிற மஞ்சளாகவும், உள் பிராணன் பொன்மையில் பச்சையாகவும் அல்லது பொன்மையில் ஊதா நிறமாகவும் (Golden Purple), உள்உடல் பொன்மையில் சிவப்பாகவும் (Golden Red), பொதுவாக அகநிலை தூய்மையடைந்து பொன்னிறமாகவும் தோன்றும். இன்னும் ஆழத்தில் ஆன்மாவுக்கு மிகவும் சமீபத்தில் மிகுந்த தூய்மையும் உணர்வும் பெருகிய ஆழ் அகநிலையில் வெண்மைத்திரை மறைக்கும். இதனால்

மிகவும் தூய உள் மனம் அல்லது பக்குவபுத்தி வெண்மையாகவோ அல்லது வெண்மை கலந்த மஞ்சள் நிறமாகவோ (Whitish Yellow), பொதுவாக உள்மனே பிராணஉடல் தத்துவங்கள் சேர்ந்து வெண்மையாகவோ தோன்றும் எ-று. "புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது. அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம். மேற்புறம் மஞ்சள் நிறம்" (உபதேசம்—ப 141 மஹோபதேசம் பார்க்கவும்.) புத்தியின் சக்தி மஞ்சளாகவும் மனம் நீலமாகவும் பிராணன் பச்சை அல்லது ஊதா (Purple ie, mixture of red & blue) நிறமாகவோ தோன்றும் என ஸ்ரீ அரவிந்தர் விளக்குவார். ஐந்தாவது திரைக்கூட்டத்தில் ஒவ்வொன்றிலும் பொன்னிறமும் கலந்துகொள்ளும்.

பொன்மைத் திரையும், வெண்மைத் திரையும் உள் மனதின் ஆழத்தில் ஆன்மாவுக்கு சமீபத்தில் உள்ளன. உள்மனதில் உள்பிராணனும் உள் உடம்பும் செயல்படத்தான் செய்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட உள்பிராணன் வள்ளலார் கூறும் பொன்மையிற் பச்சை Golden Green வர்ணமுடையதாகவும் ஐந்தாவது திரைக்கட்டத்தில் உள்ளதாகவும் கொள்ளவேண்டும். பொன்மயமான பராபர வெளி (அதாவது பொற் தம்பமிருக்கும் வெளி) யிலிருந்து உணர்வு சக்திகள் உள் பிராணனில் இறங்குவதால், உள்பிராணன் பொன்மையிற் பச்சை கலந்த திரையாகத்தோன்றும் எனக்கொள்ளலாம். சாவித்

திரி காவியத்தில், ஆன்மாவுக்குமிகவும் அருகில் உள்மனதின் ஆழத்தில் இருக்கும் மூன்று சக்தி களுள் (Triple soul-forces) ஒரு சக்தி மங்கலான நிறத்திலும் (Mother of compassion, pity & sorrows) அதன் பின் பொன்மை கலந்த ஊதா நிற ஒளியில் இன்னொரு ஆன்ம சக்தியும் (Mother of might, works and strength) இன்னும் ஆழத்தில் தூய ஒளியில் ஒரு ஆன்மசக்தி (Mother of wisdom & light) இருப்பதாகவும் ஸ்ரீ அரவிந்தர் வர்ணிக் கிருர். இரண்டாவது மூன்ருவது ஆன்மசக்திகள் முறையே ஐந்தாவது ஆருவது திரைகளின் தத்து வங்கள் எனக்கொள்ளலாம்.

ஒரு விதத்தில் ஆருவதாகிய வெள்ளைத் திரையே கடைசித்திரை எனக்கொள்ளலாம். அது கடந்தால் ஆன்மாவை மெய்ப்பதியை தரிசிக்கலாம். 'வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை அண் மையின் மறைக்கும் அருட்பெருஞ்சோதி' என வள்ளலார் விளக்குவார். பொதுவாகக் கூறுமிடத்து சாதகன் தன் மனோபுத்தி தூய்மை ஓரளவு பெற்று புருவமத்தியிலாவது, அல்லது தயை பக்தி அன்பு முதலியவற்ருல் உள்ளத் தூய்மை ஓரளவு பெற்று இருதயத்திலாவது, உள் முகமாகச்சென்று ஒரு முனைப்பட்டுக் குவிந்தநிலையில் ஆண்டவனை நாடும் தீவிர ஆர்வத்தால் ஆறு திரைகள் கடந்து அவ னுடைய உயிர் தன் சொந்த ஆன்மாவை மெய்ப் பதியை தரிசனம் (Vision) செய்கிறது. இது ஊன்

றிய அனுபவம் (realisation) அல்ல. சித்தியும் அல்ல. ஆரம்பப்படிதான் அதற்குள் எதிர்பாராத படி ஒரு திரைவந்து தடைசெய்து மறைக்கிறது. சற்று கீழ்நிலைக்கு அல்லது புறநிலைக்கு தள்ளி விடு கிறது. இதுவே ஏழாவதாகிய 7) கலப்புத்திரை. இது பலவர்ணங்கள் கொண்ட கலப்புத்திரையாகும்.

ஒருதடவை ஆறுதிரைகள் கடந்து ஆன்மாவை தரிசித்து விட்டதால் உள் நிலைகளும் புற நிலைகளும் (மேல் வெளி நிலைகளும்கூட) ரகசியமாக திறந்து கொண்டு ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளுகின் றன. உள்ளிருந்து புறமும் புறமிருந்து உள்ளும் அஞ்ஞான தத்துவங்கள் — தூய்மையும் தூய்மை யில்லாததுமான மனே பிராண உடல் தத்துவங்கள், அதாவது மனே எண்ணங்கள், பிராணனுக்கு சேர்ந்த உள்ளத்தின் பாவனைகள் உணர்ச்சிகள், இந்திரியபோக விஷயங்கள், ஆசைகளின் வேகங் கள், உடலின் தாமஸமான மந்த குணங்கள் பழக் கங்கள் ஆகிய எல்லாம்—இயங்கி முரண்பட கலக் கின்றன. அவை சந்திக்கும் இடம் இந்த ஏழாவது திரையாகும். ஆகவே இது கலப்பாகிய பலவர்ணத் திரை. ஏற்கனவே பெற்ற அனுபவங்களையோ அல்லது புதிதாக எதிர்பார்த்தோ மனது கருதும் போது அவை வராதபடியும், வந்தாலும் பூரண அனுபவமாக இல்லாமல் அரைகுறை அனுபவமாகக் கலக்க முற்றுத் தோன்றித் தடை செய்யும்; ஆகவே "கலப்புத்திரையால் கருது அனுபவங்களை அலப்புற

மறைக்கும்'' என்றார். ஸ்ரீ அன்னை இந்நிலையை விவரிக்கிறார்.

"This experience (ie. of the Force that comes from above or elsewhere to act through one and liberate) comes like a flash for a moment, then it withdraws. Only when you are quite ready for transformation that it comes to stay. But it happens at times that some people have this experience for a few seconds in their life and then the movement withdraws, the state of consciousness withdraws, but the memory remains. They imitate that."

(Bulletin April 1960 – p. 65,

இதை ஸ்ரீ அரவிந்தர் ஒரு திரை யெனவும் மேல் மனநிலை கூட ஓர் முரண்படும் பல வர்ண அலங்கோல அமைப்பு எனவும் வர்ணிக்கிறார். இது தூய்மை பெற்று இசைபெற இணைந்தால் மேல்ஏற முடியும். அஸ்வபதியின் அனுபவத்தை சாவித்திரி காவியத்தில் சொல்லுகிறார்.

"His soul had peace, it knew the cosmic whole
Then suddenly a luminous finger fell
On all things seen or touched or heard or felt
And showed his mind that nothing could be known
This great spectator and creator Mind
Was only some half - seeing's delegate.
A veil that hung between the soul and light....

An artist sight constructed the Beyond
In contrary patterns and conflicting hues
A part-experience fragmented the whole."

(Savitri p. 321-326)

ஸ்ரீ அன்னையின் சொல்படி தீட்டப்பட்ட 'சாவித்திரி சித்திரம்' ஒன்றில் (cf plate 6 of Canto V Book I Savitri) அதிமானஸம் அல்லது மேல் மனம் (Overmind) பல வர்ணங்கள் கொண்ட வெளியாக காண்பிக்கப்பட்டுள்ளது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேல் வெளிகளும் கீழ் வெளி களும் உலகுகளும் சேருமிடம், கலக்குமிடம் இது எனச் சொல்லலாம்.

ஆகவே மேற்சொன்ன எல்லா தத்துவங்களை இன்னும் தூய்மை படுத்தி ஒன்றோடொன்று இணைக்க வேண்டும். உள் நிலைகளையும் புறநிலை களையும் தூய்மைப்படுத்தி இணைத்து ஒளிமயமான தத்துவங்களாக மாற்றியமைக்கவேண்டும். தூய்மை, இசைவான இணைப்பு, உருமாற்றம் (purification, integration and transformation) செய்தால் ஆருயிர் தன் ஆன்மாவின் இருப்பிடமாகிய அக்கினி பீடத்தை அடைந்து ("விந்து என்பதே ஆன்மா. விந்துவின் பீடம் அக்கினி"—உபதேசம் ப 35) அதில் நுழைந்து பின் ஆன்மாவுடன் ஒன்ருகி அதிலேயே நிலைத்து விடும்; ஆண்டவனை எப்பொழுதும் ஆன்மாவில் அனுபவிக்கும். ஸ்ரீ அரவிந்தர் கூறுவார்.

"Here in this chamber of flame & light they met
They looked upon each other, knew themselves,
The [1]secret deity and it[2]s human part
The calm immortal and the struggling soul
They rushed into each other and grew one."

(Savitri p. 598)

(1 - ஆன்மா  2 - ஆருயிர்.)

பின்பு, சித்பதமான ஆன்மா மேல் ஏறி சகஸ்ராரத்தில் தத்பதமான பரமாத்ம நிலை (self - realisation by the individual soul by joining with the individual self in Sahasrara) யுடன் கூடும். சிற்பதமும் தற்பதமும் சேர்ந்த நிலையில் சத்திய ஞானப் பெருவெளி அனுபவத்தை அடையும். இதற்கு முன்பாகவுங்கூட ஆன்ம அனுபவம் நிலையாக ஏற்பட்டதும் (realisation of soul) அதில் ஞானப்பெருவெளி (Supermind) யின் காட்சி மாத்திரம் ஆண்டவன் அருளால் ஏற்படலாம். இதை ஸ்ரீ அன்னை விளக்குகிறார்.

"If as a result of numerous efforts on your part you come into contact with your psychic being (ie. the realisation of soul) there the door is opened wide. Through the psychic you can have immediately a fine clear vision of what the supramental (சத்திய ஞான வெளி) is, a vision only, not a realisation." (Bulletin Feb. 1960)

| 1 — பேருண்மைகள் | 2 — உண்மை தத்துவங்கள் (சித்-சக்தியின் ஆதிக்கம்) | 3 \| சுத்த மாயையில் இறங்கும் அஞ்ஞான தத்துவ வெளிகள் | 4 — அசுத்த மாயையில் இறங்கும் அஞ்ஞான தத்துவ உலகுகள். | 5 \| அசுத்த மாயை ஜட உலகில் வெளிப்பட்டுள்ள தத்துவங்கள். |
|---|---|---|---|---|
| சத்<br>Existence | இருப்பும் பொருளும்<br>Being (Self) & Substance | 'பொருளுறு வெளி'<br>Sat overmind<br>சத்மேல் மனம் | பூத உலகு<br>Subtle physical world | பௌதிக உலகமும் நம் உடலும்<br>Physical world of matter and body |
| சித்-தபஸ்<br>Consciousness-Force | சித் (பேருணர்வும்) சித் சக்தியும் (சித்து)<br>Consciousness and Conscious Force or Light and Power | 'சித்துறுவெளி'<br>Cit-tapo: overmind<br>சித்-தபோமேல் மனம் | பிராண உலகு<br>Life or vital world | நம் பிராணன்<br>Life in the physical body |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனந்தம் Bliss | இன்பம், அன்பு, ஆன்ம தத்துவம், Bliss, Love, Soul-principle. | ஆனந்த மேல் மனம் Ananda over-mind | இறந்த பின் ஜீவர்கள் தங்கும் உலகு Psychic world of Heart (behind the mental world) | நம் ஜீவன் அல்லது ஆருயிர் (ஆன்ம தத்துவம் Psyche) |
| சத்திய ஞானம் Supermind or Gnosis | உண்மை ஞானமும் உண்மை ஆற்றலும் Knowledge-Will | ஞானமேல் மனம் Gnostic over-mind. | மனோ உலகு Mind world | நம் மனம் mind in the living body of matter. |

இனி வள்ளலார் இராமலிங்கம் கூறும் திரைகள், நம் உணர்வு மேல்நோக்கி ஏறும் படிகளில் எவ்வாறு மேல் வெளிசங்ளயும், உலகுகளையும் மறைக்கின்றன என பார்ப்போம். கடைசிப்பக்கத்தில் உள்ள அட்டவணை பார்க்கவும்.

வள்ளலாரும் ஞானப் பெருவெளிக் காட்சியை முதலில் ஆன்மக் காட்சியாகப் பெறுகிறார். ‘மஹா தேவ மாலையில்’ விவரிக்கிறார். இக்காட்சியும் மறைகிறது. பின்பு அவ்வெளிக்கு நேரடியாக ஏறி அடைந்து சித்தி பெறுகிறார்.

ஸ்ரீ அரவிந்தரின் யோக நூல்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்தால் 1) சத் 2) சித்-தபஸ் அல்லது சித்-சக்தி 3) ஆனந்தம் 4) சத்திய ஞானம் (Supermind) ஆகிய பேருண்மைகள் முறையே கீழ் காணும் அட்டவணைப்படி உண்மைத் தத்துவங்களாகி பின் அவை மேல் மன வெளிகளின் (Overmind planes) மூலம் இறங்கி பின்னணியில் நிற்கவும், அஞ்ஞான தத்துவங்களாகிய வெளிகளும் உலகுகளும் தோன்றி அவை படிப்படியாக உணவும் ஒளியும் அறிவும் குறைந்து மறைந்து இறங்குவதாயிற்று. முடிவில் கார் இருளாகிய அசேதனத்தில் Inconscient இறங்கி எல்லாம் புதைந்து மறைபட்டுப்போயிற்று. அதன் பின் பரிணமக் கிரமமான ஏறுபடியில் மேற்படி இருளிலிருந்து இத்த ஜட உலகு தோன்றி அதில் உடலாகிய பூத பௌதிக தத்துவம், பிராணன், மனம், ஆன்ம தத்துவம், ஆகியவை வெளிப்பட்டுள்ளன; அரை குறை உணர்வுகளாகச் செயல்படுகின்றன. இனி அடுத்து சத்திய ஞானமும் வெளிப்படும். ஆண்டவனின் நேரடியான ஆட்சி வரும். இதை நிறைவேற்றும் வழியாக ஸ்ரீ அன்னை தெய்வீக விஞ்ஞான ஜோதி அல்லது சத்திய ஜோதியை 1956-ல் இவ்வுலகுக்கு கொண்டுவந்துள்ளார்.

ஏற்கனவே பொதுவாக சொல்லியபடி உணர்வு மேல்ஏறும் படிகளில் ascending order of consciousness ஒரு திரையின் தத்துவம் அதற்கு மேலுள்ள அல்லது மேம்பட்ட இன்னொரு தத்துவத்தையும் அது சம்பந்தப்பட்ட வெளிகளையும் உலகுகளையும் மறைக்கும். இதன்படி மனோ தத்துவம் (நீலத் திரை) அதற்குமேல் உள்ள அல்லது பின்னால் உள்ள ஆன்ம தத்துவம், ஆன்மாவின் பிரதிநிதி ஆருயிர் ஆகியவற்றையும் அவை சம்பந்தப்பட்ட ஆன்மாக் களின் உலகையும் (psychic world for internatal rest ஜீவர்கள் இறந்தபின் மறுபிறப்புவரை தங்கும் உலகு அசுத்த மாயையில் உள்ளது) ஆனந்த மேல் மன வெளியையும் (சுத்த மாயையில் Ananda overmind) மறைக்கும். நீலத்திரை ஆருயிரை மறைக் கும் என வள்ளலார் சுருக்கமாகப் பாடினார் இது போல் பிராணன் (பச்சைத்திரை) அதற்குமேல் உள்ள மனதையும் அது சம்பந்தப்பட்ட மனோலோ கத்தையும் (அசுத்த மாயையில்), பரவெளியையும் (சுத்த—அசுத்த மாயையில் Spiritual Mind Ranges) ஞானமேல் மன வெளியையும் (சுத்த மாயையில் Gnostic overmind) முறையாக மறைக்கும். ஞான வள்ளலார் பச்சைத்திரை பரவெளியை மறைக்கும், என பொருள்பட சுருக்கிச் சொன்னார். இதேபோல், உடல் தத்துவம் (சிவப்புத்திரை) அதற்கு மேல், உள்ள பிராணனையும், அது சம்பந்தப்பட்ட உலகு களையும் அதாவது அசுத்த மாயையில் பிராண லோகத்தையும் சுத்த மாயையில் 'சித்துறுவெளி'

யையும் (cit-tapo overmind) மறைக்கும். சித்துறு வெளியை தூக்கத்தின் அடையாளமான சிவப்புத் திரை 'அம்மையின் மறைக்கும்' என அருளினர்.

இனி ஐந்தாவதாகிய பொன்மைத்திரையான ஞானமேல் மனம் (Gnostic overmind) பரிக்கிரக நிலையாகும். அதற்கு மேலுள்ள மேல்மன உச்சி வெளிகளை எல்லாம் பரிக்கிரகம் அல்லது சூழ்ந்து மறைப்பு செய்யும். குறிப்பாக சத்மேல் மனம் ஆகிய 'பொருளுறு வெளி'யை (Sat overmind) மறைக்கும் என்ருர். 'அன்மையின் மறைக்கும்' (negatively resisting communication) என்றதால் மேல் ஏறவழி தோன்ருதபடி மறைக்கும் எனக் கொள்ளலாம். ஆருவதாகிய வெண்மைத் திரை என்னும் பொருளுறு வெளி அதற்கும் மேலுள்ள ஆனல் மிகவும் சமீபத்திலுள்ள சத்தியஞான வெளியை அல்லது மெய்ப்பதியை 'அண்மையின் மறைக்கும்' என்ருர்.

இனி ஏழாவது திரை யோக சாதனையைப் பற்றியது. மேலிருந்து கீழிறங்கும் சுத்த உணர்வு நிலைகளும் கீழிருந்து மேலேறும் அசுத்த உணர்வு நிலைகளும் கூடி சந்திக்குமிடம் சுத்த-அசுத்த மாயையில் ஏழாவதாகிய பல வர்ணங்கள் கொண்ட கலப்புத் திரைக்கட்டம் ஆகும். இது அதிமானஸம் அல்லது பரம்பரவெளி (Overmind proper (மேல் மனம்) ஆகும்.) இக்கலப்புத்திரை மனதால் 'கருது அனுபவங்களை அலப்புற மறைக்கும்' என்ருர். ஆகவே எல்லா தத்துவங்களையும், அகம், புறம்,

கீழ் மேல், சூழ்வு, பக்கம் ஆகிய உணர்வு நிலைகளை தூய்மை படுத்தியும் இணைத்து ஒழுங்கு படுத்தியும் அவற்றில் படிப்படியாக ஒளியும் தெய்வீக உணர்வும் நிரம்பும்படி உரு மாற்றம் (transformation) செய்ய வேண்டும், அப்போது தான் இத்திரை கடந்து ஞானப் பெருவெளிக்கு முடிவாக ஏறமுடியும்.

இனி "ஆணிப் பொன்னம்பலத்தே" பாட்டில் இத்தகைய ஏறு இறங்கு உணர்வு நிலைகளை வர்ண மணிகளால் வள்ளலார் குறிப்பிடுகிறார். இக்காட்சி அவருக்கு பொன் மயமான பராபர வெளியில் (gnostic overmind) ஏற்பட்டதாக அறியலாம். அவருடைய காட்சிப்படி இறங்கு நிலைகள்:- ஒளிர் முத்து (சத்மேல் மனம்: பொருளுறு வெளி) மாறி வெண் மணி (சித்துறு வெளி: சித்-தபோ மேல் மனம்) சீர் நீலம் (பரவெளி மனம்) ஆச்சு. பின்பு சீர் நீலம் மாறி கரு நீலம் (மனோ லோகம்) செய்ய பவளம் அதாவது இளம் சிவப்பான பவளம் light reddish coral as of pinkish rose colour (psychic world of rest or world of psychic Heart இறந்த பின் தங்கும் ஜீவர்கள் தங்கும் இருதய உலகு) ஆச்சு. இப்பவளம் மாறி மரகதப் பச்சை (பிராண லோகம்) செம்மாணிக்கம் (பூத பௌதிக உலகம்) ஆச்சு. அவருடைய காட்சிப்படி ஏறு நிலைகளாவன:— பெருமுத்து (பொருளுறு வெளி) மாறி ஜ்வலிக்கும் வயிரமாகிய வச்சிரப் பேர்மணி (ஞானப் பெருவெளி) ஆச்சு. "மிகும் பவளத்திரள்" (ஆனந்த

மேல் மனம்) மாறி வெண்மணி (சித்துறு வெளி) ஆச்சு. பொருந்திய பன்மணி அதாவது தூய்மை யால் ஒழுங்காக அமைந்து இசைந்த பலவர்ணப் பன்மணிகள் (அதிமானஸம் overmind proper) மாறி பொன் மணி (ஞான மேல் மனம் golden gnostic overmind) ஆச்சு. ''பதிஓர் நிலையில்'' எல்லா மணிகளும், எல்லா நிற ஒளிகள் ஊடுருவக் கூடிய தூய ஒளிமயமான ஸ்படிகமாக pure, colour-less, luminess, & transparent crystal மாறுவதால் அவை தம் மூலமான சச்சிதானந்தத்துக்கு (குணாதீத—அனந்த சிற்குண) ஏறுவதைக் குறிக் கும் எனக் கொள்ளலாம்.

ஜோதி அகவலில் ஆறு திரைகள் சொல்லிய பின் யோக சாதனைபற்றி விளப்புகிறார். கீழ்படி களில் மனது நீலத்திரையாகவும் மேல் படியில் அதி மானஸமாக பலவர்ண கலப்புத் திரையாகவும் இருந்து கருது அனுபவங்களை அலப்புற மறைக்கும். அடுத்து, விடய நிலைகள் (விஷய போக இச்சைகள், பிராணமய ஆசைகள்) அடர்த்தியான அழுத்தமான பல திரைகளாகவும், பின்பு தத்துவ நிலைகள் (இங்கு உடல் தத்துவங்களை குறிக்கிறார்—'' இருட் சாதித் தத்துவங்கள் எல்லாம் போயின அழகிய பொன் மேனியை நான் தழுவி நின்ற தருணம்'') அதே திறமாக அழுத்தமான பல திரைகளாகவும் உள் ளன. ஆகவே அஞ்ஞான மனோ பிராண உடல் 'திரைகளை' நீக்கவேண்டும். நீக்கினல் தூய்மை

அடைந்து உணர்வு பெருகி growth of consciousness துலங்கும். இதுவே முறையான கிரமமான பரிணமாகும் orderly evolution — 'அடைவுறத் தெருட்டும்', 'அறத்தோடு தெருட்டும்' என்பதாகும். ("ஆன்மாக்கள் (souls) ஜீவர்களாகி (evolving souls or psychic beings) அதிகரிப்பதற்கு (to evolve) பூதகாரிய தேகங்களே உரிமையாகி யிருக்கின்றன" —(ஒப்பு)

மறைக்கப்பட்ட உண்மைத் தத்துவங்களும் உயிர், மனம், பிராணன், உடல் ஆகியவற்றின் உண்மைச் சொரூபங்களும் அருளால் தெளிந்து விளங்கும். 'அருளினில் தெருட்டும்' என விளக்கு கிறார். இவ்வுண்மைச் சொரூபங்கள் எல்லாம் அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்டும் பின்னணியில் ஒதுக்கி தள்ளப்பட்டதால் மறந்தும் அஞ்ஞான மயக் கத்தில் திரிந்தும் போயிருந்தன. திரைகள் நீக்கி அவற்றை முன்னணியில் வெளிப்படையாக புறத் தேயும் தெய்வீகமாக விளங்கும்படி கொண்டுவர வேண்டும். பரிணமத்தின் சாராம்சத்தை சுருக்கமாக ஆனால் மிகத் தெளிவாக வள்ளலார் பாடி விடுகிறார். அந்தந்த அக, புற, மேல்கீழ் உணர்வு நிலைகளில் மறைப் புகள் எல்லாம் நீங்கியதும் தத்துவங்கள் அருளால் தெளிவு பெற்று அதனதன் உண்மை சொருப நிலை களுடன் கூடி ஆன்ம அரசும் சத்திய ஞான மெய்ப்

பதி அரசும் வெளிப்பட விளங்கச் செய்யும். இன்பம் பெருகும்.

"திரை மறைப்பெல்லாம் தீர்த்து ஆங்காங்கே
அரைசுறக் காட்டும் அருட்பெருஞ் சோதி...
சொரூப மறைப்பெல்லாம் தொலைப்பித்து உயிர்களை
அருளினில் தெருட்டும் அருட்பெருஞ் சோதி
மறைப்பின் மறந்தன வருவித்து ஆங்கே
அறத்தோடு தெருட்டும் அருட்பெருஞ் சோதி
எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ் சோதி."

(ஜோதி அகவல் வரி 407-423 பார்க்க)

★★
★★

குருஸ் பிரிண்டர்ஸ், பாண்டிச்சேரி.

# சிறப்புச் செய்தி

"ஐயனே நீங்கள் திருவுளம் கொண்டீர்கள். நான் அதை நிறைவேற்றுகிறேன். புதுஜோதி யொன்று உலகில் பாயுது. புதுஉலகொன்று பிறக்கிறது. வாக்களிக்கப்பட்டவை நிறைவேற் றப்பட்டு வருகின்றன."

ஸ்ரீ அன்னை
*29—2—1956.*

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

வள்ளல் பெருமான்
மஹோபதேசம் 22-10-1873